

# kulasEkara pAndiyan's mathurApuri ambikai mAlai
# (in tamil script, TSCII format)
# குலசேகர பாண்டியன் அருளிய
# மதுராபுரி அம்பிகை மாலை

Etext Preparation (input) : Dr. Kumar Mallikarjunan, Blacksburg, Virginia, U.S.A.
Etext Preparation (proof-reading) : Dr. Nagamanickam Ganesan, Houston, TX, U.S.A.
Etext Preparation (webpage) : Kumar Mallikarjunan
Note: This 16th century work has been provided to the Project Madurai by Dr. N. Ganesan of Texas, U.S.A. Special thanks to him.
This Etext file has the verses in tamil script in TSCII-encoding. So you need to have a TSCII-conformant tamil font to view the Tamil part properly. Several TSCII conformant fonts are available free for use on Macintosh , Unix and Windows (95/98/NT/3.11) platforms at the following websites:
http://www.tamil.net/tscii/
http://www.geocities.com/Athens/5180/tsctools.html
In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

© Project Madurai 1999.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.tamil.net/projectmadurai. You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

Introduction by Dr. N. Ganesan, Nasa-Johnson Space Center, Houston, TX, USA

**முன்னுரை**
**முனைவர் நா. கணேசன், நாசா-'சான்சன் விண்வெளி மையம், அமெரிக்கா**

முகவுரை

மதுராபுரி அம்பிகையாம் மீனாட்சியைத் துதிக்கும் இந்நூல் சக்தி வழிபாட்டிற்கு உகந்தது. இம்மாலை காப்பு, நூற்பயன் போக, 30 கட்டளைக் கலித்துறைகளால் இயன்றது. பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த குலசேகர பாண்டியன் என்னும் மன்னர் பாடியது. மதுரை மூதூரில் சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்டபோது, பாண்டியர் தென்காசியில் குடியேற நேரிட்டது; தென்பாண்டியர் ஆட்சி ஒரு சிறுவட்டமாகக் குறுகிற்று, பாண்டியர்களொடு என்றும் தொடர்புடைய பொதியில் கடைசியிலும் புகலிடம் கொடுத்தது. தாங்கள் வளர்த்துக் கட்டிக்காத்த தமிழைப் பயின்று தம்மால் முடிந்ததைப் பெருமை குன்றிய நிலையிலும் செய்துள்ளனர் என்பதற்கு இம்மாலையும் சான்று. குலசேகரருக்குக் குழந்தையில்லை; அவர் தம்பியின் மக்களோ, பேரர்களோ நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியரும், கொக்கோகம் பாடிய வரதுங்கராம பாண்டியரும் ஆவர். மதுராபுரி அம்பிகை மாலை செம்பாகமான நடை உடையது. முற்காலத்தில் பாண்டிநாட்டில் குழந்தைகள் ஏட்டுப் பள்ளியில் பயின்றது முதல்முதலாக இந்த மாலையையே. முக்கியச் சிறப்பு என்னவென்றால், இந்நூலைத் துய்த்த அபிராமி பட்டர் இதன் வழிநூலாக அபிராமி அந்தாதி பாடியிருக்கிறார். மாலைத் தொடர்கள் அந்தாதியில் அப்படியே பயில்வது அகச்சான்று. மேலும் அறிய, மு. அருணாசலம், தென்காசிப் பாண்டியர், 1977, திருச்சிற்றம்பலம் மாயூரம் என்னும் புத்தகத்தைத் துணைக்கொள்க.

மதுராபுரி மாலைப் பாடல் இரண்டின் சிற்றுரை

கணையும், குமிழும், இணை நெடும் சாபமும், காரும், வள்ளைத்
துணையும், பவளமும், சோதி நிலாவும், துவண்ட பச்சைப்
பணையும், பனித் தடம் காந்தளும், பாந்தளும் பத்தும் ஒன்றாய்
அணையும் திரு உருவே! மதுராபுரி அம்பிகையே! 10.

அம்பு போன்ற கண்களும், குங்குமச் சிமிழ் அனைய நாசியும், நீண்ட வில்லை வெல்லும் புருவமும், மேகம் என்னும் கூந்தலும், வளைந்த வள்ளைக்கொடியை ஒத்த காதுகளும், பவளமும் வியக்கும் செவ்விதழும், நிலாவுடன் போட்டியிடும் நெற்றியும், இளம் மூங்கில் என்னுமாப்போலத் தோளும், காந்தள் பூவுடன் வாதிடும் நீள விரலும், பாம்புப்படம் போலும் அல்குலும் ஆகிய அனைத்து உறுப்புகளும் பெண்மையின் சிகரமாக விளங்கப்பெறும் மதுரைக்கு அரசி மீனாட்சி அம்மையைப் போற்றித் துதிக்கிறேன்.

உடலுறுப்பு ஒன்றையும் சொல்லாமலே அவற்றைக் குறிப்பால் உணர்த்துவது முற்றுருவக அணியாம். லலிதா உபாசகராகக் குலசேகர மன்னர் விளங்கியமை வெள்ளிடை மலை. மதுரை இந்தியாவின் சிறந்தவொரு சக்தி பீடம். அதனால்தான், மீனாட்சியம்மையின் அவயவங்கள் அனைத்தையும் குறிப்பிட்டுத் தாந்திரிக முறையில் வணங்குகிறார். தமிழின் சிறப்பே எதுகைதான். இந்த மாலையில் ஒவ்வொரு பாட்டிலும் இரண்டாவது எழுத்து மட்டுமன்றி, 6-7 எழுத்துக்கள் முதல் சீரில் ஓரெதுகையாய் அமைந்து, பொருள் எளிமையில் விளங்குவது தனிச் சிறப்பு. பெண்தெய்வத்தைப் போற்றும் துதிநூல்கள் உலக மொழிகளில் அரிதானவை. அவற்றுள்ளும் மாலை பழமையானது. மாலையை ஆழ்ந்து துய்த்த அபிராமி பட்டர் இந்த பாணியிலே விரிவாக்கி அந்தாதியை 100 பாட்டாகச் செய்துள்ளார்.

நூற்பயன்

பிடித்தாரைக் கட்டி அணைத்து, அமுது ஊட்டிய பேயின் முலை
குடித்து ஆடும் மாயன், குலசேகரன், வட குன்றைச் செண்டால்
அடித்தான் வடித்த சொல் அம்பிகை மாலை, ஐ ஆறு கவி
படித்தார்கள் கற்பகக் காவும், பொன் நாடும் படைப்பவரே.

திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டதாகத் திருமங்கை மன்னர் பாசுரம் பாடியுள்ளார். அதுபோல், குழந்தையைக் கொல்லும் பொருட்டுக் கம்சன் ஏவிய பூதனையைக் கண்ணன் கொன்றதைக் குறிப்பிட்டுத், தான் அந்தக் கண்ணனே என்று தன்னம்பிக்கையுடன் அறிவிக்கிறார். புறநானூற்றில் கண்ணன் வழிவந்த வேளிரை அகத்தியர் தென்திசைக்கு அழைத்துவந்ததை நினைவூட்டுகிறது. பாண்டிய மன்னர் கண்ணன் பரம்பரை ஆனதால்தான் மதுரை என்னும் பெயர் கூடலுக்கு நிலைத்துள்ளது. நாட்டில் வறட்சி சூழ்ந்தபோது, உக்ரகுமார பாண்டியன் மேரு மலையைச் செண்டு என்னும் ஆயுதத்தால் அடித்துச் செல்வம் பெற்று மக்களைக் காத்தான் என்பது மதுரைத் திருவிளையாடல்களில் ஒன்று.

கண்ணன் வழிவந்தவனும், எந்தநிலையிலும் போராடி மக்களைக் காக்க உறுதி பூண்ட பாண்டியனும் ஆன குலசேகரன் பாடிய 30 பாடல் சேர்ந்த அம்பிகை மாலையைப் பக்தியுடன் வாசிப்பவர்களுக்கு இம்மையில் கற்பகமரம் சேர்ந்த சோலையைப் பெற்றாற்போல் எல்லா வளமும், மறுமையில் இந்திர பதவியும் வந்தடையும் என்றபடி.

வளமும் நலமும் விளைக,

நா. கணேசன்,
நாசா-'சான்சன் விண்வெளி மையம்
அமெரிக்கா

# குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை

**விநாயகர் காப்பு**
**கட்டளைக் கலித்துறை**

நடக்கும் திரு விளையாட்டு ஓர் அறுபத்து நாலும் சொக்கர்
அடக்கும் தென் கூடலில் அம்பிகை மாலைக்கு அருவி மதத்,
தடக் கும்ப, கம்பச், சிறு கண், புகர் முகத்து, ஆல வட்டம்
முடக்கும் தடக்கை, ஒரு கோட்டு வாரணம் முன் நிற்கவே.

**நூல்**

திருவே! விளைந்த செந்தேனே! வடி இட்ட தெள் அமுதின்
உருவே! மடப் பிள்ளை ஓதிமமே! ஒற்றை ஆடகப் பூந்
தருவே! நின் தாமரைத் தாளே சரணம், சரணம் கண்டாய்,
அருவே! அணங்கு அரசே! மதுராபுரி அம்பிகையே! 1.

நாள் கொண்ட கொங்கைத் துணையும், பொன் மேனியும், நஞ்சு அளித்த
வாள் கொண்ட நாட்டமும், தொண்டைச் செவ் வாயும், மருங்கு உடுத்துத்
தோள் கொண்ட செம் பட்டும், முத்து ஆரமும் கொண்டு தோன்றி எனை
ஆள் கொண்ட நாயகியே! மதுராபுரி அம்பிகையே! 2.

கரும்பும், கணை ஐந்தும், பாச அங்குசமும், கைக் கொண்டு அடியேன்
திரும்பும் திசை தொறும் தோற்று கண்டாய் - இசை தேக்கு மணிச்
சுரும்பு உண்ட காவியும், சோதி நிலாவும், துளிரும் சற்றே
அரும்பும் கனம் குழலாய்! மதுராபுரி அம்பிகையே! 3.

குன்றே எனும் முலையார் தரும் காதல் கொடுமை எல்லாம்
வென்றேன், மறலியை விட்டு விட்டேன், விரைத் தாமரைத் தாள்
என்றே என் சென்னி வைத்தாய், பின்னை யான் செய்யும் ஏவல் எல்லாம்
அன்றே உன் ஏவல் கண்டாய், மதுராபுரி அம்பிகையே! 4.

வடி வைத்த வேல் விழியார் அநுராக மயக்கில் சென்று
குடி வைத்த நெஞ்சு என்று மீளும் கொலோ! அன்பு கொண்ட தொண்டர்
முடி வைத்தவாறு, என் புலைத் தலை மேல் வைத்த முத்தின் தண்டை
அடி வைத்த பேர் இன்பமே! மதுராபுரி அம்பிகையே! 5.

வடக் குன்ற மேருவும், மூது அண்டம் எட்டி வளைந்து புறம்
கிடக்கும் கடலும், புவனங்கள் ஏழும், கிளர் மருப்புத்
தடக் குஞ்சரம் எட்டும், எல்லாம் திரு உந்தித் தாமரையில்
அடக்கும் பராசக்தியே! மதுராபுரி அம்பிகையே! 6.

ஒளி கொண்ட வெண் பிறைத் தோடும், பொன் ஓலையும், ஊறிய தேன்
துளி கொண்ட செங்கனி வாயும், முத்தாரமும், தோளும் என்றன்
களி கொண்ட நெஞ்சம் குடி கொண்டவா இசை கக்கு மணி
அளி கொண்ட பூங்குழலாய்! மதுராபுரி அம்பிகையே! 7.

மணியும், தரளமும், வெண் நகையோ? வழி மூவர் செயத்
துணியும், தொழிலும் உன் செய் தொழிலோ? பத்தித் துத்தி முடிப்
பணியும், சுடரும், கடல் ஏழும் நின் கழல் பங்கயத்தில்
அணியும் திரு உருவே! மதுராபுரி அம்பிகையே! 8.

செழும் துங்கக் கொங்கையும், முத்து ஆரமும், பொன் சிலம்பும், திங்கள்
கொழுந்தும், மகரக் குழையும் எல்லாம், வண்டு கொண்டு சுற்றி
உழும் தும்பை சூடும் திரு மேனியும், உன் உடலும் ஒன்றாய்
அழுந்தும் பராசக்தியே! மதுராபுரி அம்பிகையே! 9.

கணையும், குமிழும், இணை நெடும் சாபமும், காரும், வள்ளைத்
துணையும், பவளமும், சோதி நிலாவும், துவண்ட பச்சைப்
பணையும், பனித் தடம் காந்தளும், பாந்தளும் பத்தும் ஒன்றாய்
அணையும் திரு உருவே! மதுராபுரி அம்பிகையே! 10.

இணங்கேன் ஒருவரை; நின் இரு தாள் அன்றி எப்பொழுதும்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன்; வஞ்ச நெஞ்சர் உடன்
பிணங்கேன் - அமுதம் பெருகும் செம் பாதிப் பிறை முடித்த
அணங்கே! சரணம் கண்டாய், மதுராபுரி அம்பிகையே! 11.

முலைக்கே அவசத் துயர் விளைப்பார் இன்ப மோகம் என்னும்
வலைக்கே அகப்பட்டு அழுந்தி விடாமல், வலிய வந்து என்
தலைக்கே பதம் வைத்த தண் அளியாய்! முத்தம் தத்து திரை
அலைக்கே விழி துயில்வாய்! மதுராபுரி அம்பிகையே! 12.

கொடிக் கொண்ட சிறு இடையார் மணி நூபுரம் கொஞ்சும் அடிப்
பொடிக் கொண்ட சென்னி உன் கால் வைக்குமோ? புற்று அரவெடுத்து
முடிக் கொண்ட சொக்கர் அழியா விரதம் முடிக்க என்றே,
அடிக் கொண்ட பூண் முலையாய்! மதுராபுரி அம்பிகையே! 13.

விளையும் கருக் குழி வீழாமல், என் தன் வினைப் பிறவி
களையும் படிக்கும் கருது கண்டாய் - கழுநீரை வென்று
வளையும் தரள மணித் தோடு அழுத்திய வள்ளையைச் சென்று
அளையும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே! 14.

ஊடும் பொழுது உன் கருணை விடாமல் உவப்பதற்குக்
கூடும் தொழிலை மறப்பது உண்டோ? நறைக் கொன்றை அம் தார்
சூடும் தலைவர் திரு மார்பில், வாரி சொரி தரளம்
ஆடும் துணை முலையாய்! மதுராபுரி அம்பிகையே! 15.

மழைக் கொந்து அளக மடவார் தம் காதல் வலைத் தலைப்பட்டு
உழைக்கும் துயரம் ஒழிப்பது என்றோ? இரண்டு ஊசல் மணிக்
குழைக்கும் கலந்த பசுமை எலாம் குழை ஊடு நடந்து
அழைக்கும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே! 16.

இணைக் கும்ப மென் முலையார் விழி வேலுக்கும், எய்யு மதன்
கணைக்கும் தனி இலைக்கா விடவோ? மணிக் கச்சு அகலாத்
துணைக் கும்ப மென் முலையாய்! சொக்கர் மேனி துவளக் கட்டி
அணைக்கும் கமலம் உள்ளாய்! மதுராபுரி அம்பிகையே! 17.

நும் கேள்வர் பாகத்தும், அந் நான் மறை எனும் நூல் இடத்தும்,
கொங்கு ஏய் பொகுட்டுக் கமல ஆலயத்தும், குடி கொண்ட நீ
எங்கே இருக்கினும் நாய் அடியேனுக்கு இடர் வரும் போது
அங்கே வெளிப்படுவாய்! மதுராபுரி அம்பிகையே! 18.

பொன்னே! நவ மணியே! அமுதே! புவி பூத்து அடங்கா
மின்னே! ஒளி உற்ற மெய் பொருளே! கரு மேதியின் மேல்
எந் நேரம் காலன் வந்து ஆவி விட்டாலும், எனக்கு அஞ்சேல் என்று
அந் நேரம் வந்து அருள்வாய்! மதுராபுரி அம்பிகையே! 19.

விருந்து உண்டு போகைக்கு நாயேன் சடலத்தை வெம் கழுகும்,
பருந்தும் சுழலு முன்னே வருவாய் - மணப் பந்தலிலே
திருந்தும் கரம் பற்றி நிற்பார் திரு முகச் செவ்வி எல்லாம்
அருந்தும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே! 20.

நாரணன் கொஞ்சும் புகழ் நான்முகற்கும், பொன் நாட்டவர்க்கும்
காரணம் கொஞ்சும் நின் சிறு அடிக்கே திசை கட்டும் எட்டு
வாரணம் கொஞ்சும் கடம்பு அடவியின் மகிழ்நருடன்
ஆரணம் கொஞ்சும் அம்மே! மதுராபுரி அம்பிகையே! 21.

நெளிக்கும் புழுவுக்கு இடம் ஆம் குரம்பையின் நின்றும், உயிர்
ஒளிக்கும் பொழுது வெளிப்படுவாய் - ஒழியாப் பிறவிச்
சுளிக்கும் கடலில் சுழலாமல் வாழ்வைத் துறந்து, படைத்து,
அளிக்கும் பராசக்தியே! மதுராபுரி அம்பிகையே! 22.

ஒழியாப் பனித் தடம் கண் நீர் சொரிய வந்து, உன் அடிக்கே
பொழியாப் புது மலர் இட்டு நிற்பார்க்கு, உன் பொழி கருணை
விழியால் சுரப்ப, அலர்ந்த செம் தாமரை வீடு ஒன்றவே
அழியாப் பதம் தருவாய், மதுராபுரி அம்பிகையே! 23.

ஏலம் அடங்கும் குழலார் குறு ஏவலில் எய்த்து, அடியேன்
காலம் அடங்கும் முன்னே வருவாய் - விண் கடந்து நின்ற
கோலம் அடங்கும் அறியாத பச்சைக் குழவியைப் போல்
ஆலம் அடங்கும் அம்மே! மதுராபுரி அம்பிகையே! 24.

போர்க்கும் கலா மதியும், கொன்றை மாலையும், பொன் முடி மேல்
சேர்க்கும் தலைவர் முன் செல்லும் அப் போது, திரண்ட முத்தின்
வார்க் குங்குமக் கொங்கை யானைக்கு முன்னம் மணி முரசம்
ஆர்க்கும் பராசக்தியே! மதுராபுரி அம்பிகையே! 25.

நோக்கும் கருணை விழியால் பொது அற நோக்கி, என்னைக்
காக்கும் படிக்கும் கருது கண்டாய் - ஒளி கக்கு நிலா
வீக்கும் சடை அடவியார் உண்ட காள விடத்தை அமுது
ஆக்கும் சிவ ஆனந்தமே! மதுராபுரி அம்பிகையே! 26.

உலை குதிக்கும் தழல் ஊறிய கானலை உன்னிச் சென்று,
கலை குதிக்கும்படி போல் இழைத்தேன் - கழிச் சேல் வெகுண்டு
வலை குதிக்கும் செம் கழுநீர் உடைந்து வழிந்த செம் தேன்
அலை குதிக்கும் தடம் சூழ் மதுராபுரி அம்பிகையே! 27.

பொடி பட்ட பிட்டுக்குத் தோள் கொண்டு கூடை மண் போட்டுப், பொங்கி
வெடி பட்ட வையை அடைத்த அந் நாள், சொக்கர் மேனி சுற்றும்
கொடி பட்ட போது முழு நீலக் கோமள மேனியிலும்
அடி பட்டதோ? அணங்கே! மதுராபுரி அம்பிகையே! 28.

பூண்ட கை வாரிப், புது மலர் தூவி, நின் பொன் அடிக்கே
கூண்ட கை, சென்னி குவிக்கப் பெற்றேன் - பிறைக் கோடு அணிந்து,
நீண்ட கை வேழப் பிடர் ஏறி, வட்ட நிலம் புரக்கும்
ஆண் தகையே! அணங்கே! மதுராபுரி அம்பிகையே! 29.

கொஞ்சும் குதலை மின்னார்க்கு அன்பு பூண்டு குலையும் என் தன்
நெஞ்சு, உன் பொன் பாதம் நினைப்பது உண்டோ? வெண் நிலா மதிக் கூன்
பிஞ்சும், கணை வில்லும், அங்குச பாசமும், பிஞ்சு மலர்
அஞ்சும் தரித்தவளே! மதுராபுரி அம்பிகையே! 30.

**நூற்பயன்**

பிடித்தாரைக் கட்டி அணைத்து, அமுது ஊட்டிய பேயின் முலை
குடித்து ஆடும் மாயன், குலசேகரன், வட குன்றைச் செண்டால்
அடித்தான் வடித்த சொல் அம்பிகை மாலை, ஐ ஆறு கவி
படித்தார்கள் கற்பகக் காவும், பொன் நாடும் படைப்பவரே.